மின்னஞ்சல் மூலமாக

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) அவர்களின் செயல்முறைகள், சென்னை-600 006.**

ந.க.எண்.18615 / டபிள்யு3 / இ2 / 2022, நாள்.25 .03.2022

பொருள்- தமிழ்நாடுமேல்நிலைக்கல்விப்பணி - அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 01.01.2022 நிலவரப்படி பணிமாறுதல் மூலம் பதவி உயர்வில் **வணிகவியல்** பாட முதுகலையாசிரியராக நியமனத்திற்கு தகுதி வாய்ந்தோர் பெயர் பட்டியல் தயார் செய்ய பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், பள்ளித்துணை ஆய்வர்கள், தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Commerce and Business) மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்களின் விவரங்கள் கோருதல் - சார்பாக.

பார்வை-
1. தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி சிறப்பு விதிகள் அரசிதழில் எண்.36 வெளியிடப்பட்ட நாள்.30.01.2020
2. அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக் கல்வி (பட்ஜெட்-1) துறை நாள். 18-05-2018.

---------

தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப் பணியின்கீழ் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி மேல் நிலைப் பள்ளிகளில் 01.01.2022 நிலவரப்படி பணிமாறுதல் மூலம் வணிகவியல் பாட முதுகலையாசிரியர் நியமனத்திற்கு தகுதிவாய்ந்தோர் பெயர் பட்டியல் தயார் செய்ய பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், பள்ளித்துணை ஆய்வர்கள் மற்றும் தொழிற்கல்வி பாடபிரிவில் வணிகவியல் போதிக்கும் தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Commerce and Business) சார்ந்த விவரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலை பின்பற்றி மாவட்ட வாரியாகத் தயார் செய்து பெயர் பட்டியலினை அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் (**நகராட்சிப் பள்ளிகளில் 1.6.86க்கு முன்னர் நியமனம் செய்யப்பட்டவர்கள் இருப்பின் பட்டியல் தனியாக அனுப்பப்படவேண்டும்**) ஆசிரியப் பயிற்றுநர்கள், பள்ளித்துணை ஆய்வாளர்கள், தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Commerce and Business) மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் ஆகியோர் சார்ந்து விவரங்கள் தயாரிக்கப்படவேண்டும்.

2. அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள்/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள், அலகு விட்டு அலகு மாறுதல் பெற்றவர்கள் மற்றும் கருணை அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களின் விவரங்கள் (சுய விவரம் அடங்கிய கருத்துருக்கள்) சார்ந்த அரசு/நகராட்சி

உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் இருந்து பெற்று இணைப்பில் குறிப்பிட்ட படிவம் 2ல் தனியாக, இவ்வியக்ககத்திற்கு நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1. வணிகவியல் | **31.12.2021 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள்/ பள்ளித்துணை ஆய்வாளர்கள்/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Commerce and Business) மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக கருத்துருக்கள் மட்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.** |

பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்களின் விவரங்களை அனுப்பி வைக்கும்பொழுது **கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனத்தில் கொண்டு** விவரங்களை சரிபார்த்து பட்டியல் தயார் செய்யும்படி முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1 பார்வையிற்காண் அரசிதழின்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப்பணி சிறப்பு விதிகளில் " Must have obtained a Bachelor's degree and Master's degree in the same subjects or their equivalent in respect of which recruitment is made." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இதனடிப்படையில் வணிகவியல் பாட முதுகலை ஆசிரியராக பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய இளங்கலை மற்றும் முதுகலை வணிகவியல் பாடத்தில் முதன்மைப் பாடமும் மற்றும் பி.எட். பயின்றிருக்க வேண்டும்.

2 பட்டியலில் இடம் பெறும் ஆசிரியர்கள் 31.12.2021ற்குள் வணிகவியல் பாடத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பில் ஒரே பாடமும், பி.எட்., பட்டப்படிப்பும் முடித்திருத்தல் வேண்டும்.

3 வெளிமாநிலச் சான்று எனில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4 1.1.2019 அல்லது அதற்குப் பின் முதுகலையாசிரியர் பதவி உயர்வை 3 ஆண்டிற்கு தற்காலிகத் துறப்பு செய்தவர்கள் மற்றும் ஏற்கனவே முதுகலையாசிரியர் பதவி உயர்வினை நிரந்தரத் துறப்பு செய்தவர்களின் பெயர்கள் பட்டியலில் எக்காரணத்தைக் கொண்டும் இடம் பெறுதல் கூடாது. அவ்வாறு பரிந்துரைக்கப்படின் சம்மந்தப்பட்ட அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும்

ஏற்கனவே பதவி உயர்வினை தற்காலிகமாக 3 ஆண்டுகள் உரிமை விடல் செய்தவர்கள் தற்போதுவரை 3 ஆண்டுகள் நிறைவு செய்திருப்பின் அன்னாரது பெயரினை முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க அறிவுறுத்தப்படுகிறது.

5 அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்கள் சார்ந்த விவரங்களை அளிக்கையில் அவர்கள் தேர்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் (Year of Recruitment and Rank No.) தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். (நியமன ஆணையின் நகல் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்)

6 இரட்டைப்பட்டப்படிப்பு (DOUBLE DEGREE) மற்றும் (Simulataneous Degree) பட்டயப்படிப்புகள் படித்தவர்களின் பெயர்களை பட்டியலில் சேர்க்கக் கூடாது.

7 அரசாணை நிலை எண்.65 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்(எஸ்) துறை நாள். 02.07.2014 –ன்படி 10+2+3 மற்றும் முதுகலை பட்டத்துடன் B.Ed., அல்லது 11+1+3 முதுகலை பட்டத்துடன் B.Edஎன்ற முறைப்படி கல்வித் தகுதிகள் பெற்ற பணியாளர்களின் பெயர்களை மட்டுமே பட்டியலில் சேர்க்க வேண்டும்.

8 **துறை மாறுதல் மற்றும் அலகுவிட்டு அலகு மாறுதல் மூலம்** பணியேற்றவர்களின் பெயர்களை அவர்கள் பள்ளிக் கல்வித்துறையில் பணியேற்ற நாளினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பட்டியலில் சேர்க்க வேண்டும்.

9 ஆசிரியர்களின் பிறந்ததேதி, நியமனமுறை, கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விபரம் (17(a) அல்லது 17(b)) போன்றவற்றில் உள்ள நடவடிக்கைகளை உறுதி செய்து சரியாக அளிக்க வேண்டும்.

10 தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், பள்ளி துணை ஆய்வர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் ஆகியோர் சார்ந்த பெயர்களை இப்பட்டியலில் பரிந்துரைக்கக் கூடாது.

11 தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்று தண்டனை காலம் முடிவடையாத பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், பள்ளி துணை ஆய்வர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்ந்த பெயர்களை இப்பட்டியலில் பரிந்துரைக்கக் கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மற்றும் தண்டனை பெற்றுள்ள பட்டதாரி

ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், பள்ளி துணை ஆய்வர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் விவரங்கள் பரிந்துரைக்கப்படும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12 **நகராட்சிப் பள்ளிகளில் 1.6.86க்கு முன்னர் நகராட்சி ஆணையரால் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றிவரும் பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்கள் பட்டியலில் இடம் பெறுதல் கூடாது. இவர்கள் சார்பான விவரங்கள் தனியாக அளிக்கப்படவேண்டும்.**

13 சிறுபான்மை மொழியில் (தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் உருது) முதுகலைப்பட்டம் பெற்றிருப்பின் அத்தகைய ஆசிரியர்கள் அனைவரின் விவரங்களும் மொழி மற்றும் பாடவாரியாகத் தனித்தனியே பட்டியலிட்டு அனுப்பப்பட வேண்டும்.

14 வணிகவியல் பாடத்தில் தகுதிபெற்ற ஆசிரியர் எவருமில்லை எனில் அப்பாடத்திற்கு "**இன்மை**" அறிக்கை தனியே தவறாமல் அனுப்பப்பட வேண்டும்.

15 இப்பட்டியலுக்கு பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் இருவேறு பாட முதுகலைஆசிரியர் பதவிக்கு பணிமாறுதல் மூலம் நியமனம் பெற தகுதி பெற்றிருப்பின் அவர்களின் பெயர்களைப் பரிந்துரைக்கப்படும்போது அவர்கள் சார்ந்த விவரங்கள் மற்றும் தனிப்பட்ட குறிப்புரை அளித்தல் வேண்டும்.

மேலும் பெயர்பட்டியலில் சேர்க்கப்படும் ஆசிரியர்கள் சார்பாக கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களைப் பெற்று சரிபார்த்து முதன்மைக் கல்வி அலுவலரின் மேலொப்பத்துடன் சார்ந்த ஆசிரியரின் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(அ) பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் நகல்.

(ஆ) தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட ஆணையின் நகல்

(இ) பத்தாம் வகுப்பு அல்லது பட்டப்படிப்பில் தமிழ் பயிலாத ஆசிரியர்கள் தமிழ் படித்த சான்றின் நகல் / தமிழ் பாடத்தில் TNPSC யில் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்.

(ஈ) பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள்.

(உ) பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் பி.எட்., பட்ட சான்றுகளின் நகல்கள் மற்றும் ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல்களின் நகல் (Consolidate Mark Sheet) இணைக்கப்படவேண்டும்.

(ஊ) பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகள் வெளிமாநிலத்தில் பயின்று இருந்தால் அதற்கான இணைத்தன்மை (Equivalency) வழங்கிய ஆணையின் நகல் அவசியம் இணைக்கப்பட வேண்டும்.

(எ) பட்டப்படிப்பில் இணைத்தன்மை (Equivalency) பெற்ற அரசாணை விவரம் அவசியம் இணைக்கப்படவேண்டும்.

(ஏ) மேலும் கடந்த ஆண்டுகளில் தகுதியிருந்தும் பரிந்துரைக்கப்படாமல் விடுபட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்கள் இம்முறை முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டால் கடந்த ஆண்டுகளில் எந்த காரணத்திற்கான முதன்மைக் கல்வி அலுவலரால் பரிந்துரைக்கப்படாமல் விடுபட்டது என்பதற்கான சரியான விளக்கத்தினை அளிக்க வேண்டும்.

ஐ) குறிப்பிட்ட பாடத்தில் கல்வித் தகுதிக்கான பட்டங்கள் (Degree) பெறாத நிலையில் அப்பாடங்களுக்கான இணைத்தன்மை (Equivalence) அரசாணை நகல் இணைக்கப்படவேண்டும்.

16 அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில், தொழிற்கல்வி ஆசிரியர்களாக பணிபுரிபவர்களுக்கு பணி மாறுதல் மூலம் முதுகலை ஆசிரியர்களாக (வணிகவியல்) நியமனம் செய்ய பெயர்ப் பட்டியலில் சேர்க்கும் போது, அரசாணை எண்.185 பள்ளிக் கல்வித் துறை (விஇ) துறை, நாள்.25.08.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு "வணிகவியல் பாடமுதுகலை ஆசிரியர் பதவிக்கு மாறுதல் மூலம் பதவி உயர்வுக்கு கருதப்படுவதற்கு தொழிற்கல்வி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், பணிவரன்முறை செய்யப்படுவதற்கு முன்பே எம.காம்., பி.எட்., முடித்தவர்களுக்கு, அவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளினையும், பணிவரன்முறை செய்யப்பட்ட பின்பு எம்.காம்.பி.எட்., முடித்தவர்களுக்கு அவர்கள் எம்.காம்.பி.எட்., கல்வித் தகுதியினை பெற்ற நாளினை அடிப்படையாகக் கொண்டும், பட்டதாரிஆசிரியர்/தமிழாசிரியர்/ஆசிரியர் பயிற்றுநர்/பள்ளித்துணை ஆய்வர் மற்றும் அதனையொத்த பதவிகளை பொறுத்தவரை அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளினை அடிப்படையாகக் கொண்டும், ஒருங்கிணைந்த பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், தொழிற்கல்வி பாடப்பிரிவில் வணிகவியல் பாட முதுகலை ஆசிரியர் பதவிக்கு பெயர்ப்பட்டியல் தயாரிக்க கருத்தில் கொள்ள வேண்டும்.

17 அந்தந்த மாவட்டத்தில் பெயர்ப்பட்டியல் தொகுக்கப்பட்டு, இந்த தொகுப்புப் பட்டியலின்கீழ் இப்பட்டியலில் உள்ள ஆசிரியர்களைத் தவிர வேறு எந்த ஆசிரியருடைய பெயரும் விடுபடவில்லை என்று சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரால் சான்று அளிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

18 பெயர்ப்பட்டியல் தயார் செய்யும்போது பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள்/பள்ளித்துணை ஆய்வாளர்கள்/தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Commerce and Business) மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக விவரங்களைப் பெற்று, கூர்ந்தாய்வு செய்து, மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகளில் முதன்மைக் கல்வி அலுவலரால் மேலொப்பமிட்ட நகல்களுடன் தொகுப்புப் பட்டியலை பாடவாரியாகவும், சிறுபான்மை மொழிசார்ந்த பாடங்களுக்கு தனியாக, மொழிவாரியாக தயார் செய்தும் மற்றும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது வழிகளில் (Medium of instruction) உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சார்பான விவரங்களையும் இதே போன்ற படிவத்தில் தயார் செய்தும் பாடவாரியாக தனித்தனியே அனுப்பி வைக்கப்பட வேண்டும். தகுதிவாய்ந்தோர் பெயர்ப்பட்டியலுடன் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புதிய படிவம் II-ல் குறிப்பிடப்பட்டுள்ள 18 கலங்களில் எவ்வித மாற்றம் செய்யாமல் (TAU-Marutham font) ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து Excel Formatல் குறுந்தகட்டில் பதிவு செய்து, பதிவு செய்த குறுந்தகடு (CD) மற்றும் அச்சு நகல் ஆகியவைகளை எவ்வித தவறும் இன்றி

சம்பந்தப்பட்ட பிரிவு எழுத்தர் அல்லது சார்ந்த பிரிவு கண்காணிபாளர் இணைப்பில் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி நேரில் ஒப்படைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்களின் பெயர்கள் மட்டுமே பரிசீலிக்கப்பட்டு பணிமாறுதல் மூலம் சம்பந்தப்பட்ட பாட முதுகலையாசிரியராக தற்காலிகமாக பதவி உயர்வு வழங்குவதற்கு இப்பட்டியல் தயார் செய்யப்படுவதால், இப்பொருளில் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி, மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி ஆசிரியர்களின் விவரப்பட்டியலை சரியாகத் தயார் செய்து காலதாமதமின்றி நேரில் சமர்பிக்க அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பட்டியலில் பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து எந்த ஆசிரியரிடமிருந்தாவது முறையீடு ஏதும் பின்னர் பெறப்படின், அதற்கு சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலரே முழுப்பொறுப்பையும் ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் மிக கவனமாக பின்பற்றி படிவம் 1 மற்றும் படிவம் 2ல் தெரிவிக்கப்பட்டுள்ள கலங்களில் உள்ள விவரங்களை எந்த கலமும் விடுபடாமல், முழுமையாகப் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சரிபார்த்து அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கான **ஒப்புதலை இணை இயக்குநருக்கு (மேல்நிலைக் கல்வி) உடனடியாக அனுப்புமாறு** அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு - 1) படிவம் – I & II

2) கால அட்டவணை

**ஒம்/-(எம்.இராமசாமி)**

**இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி)**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள் (ஒபக)

**நகல்**

1) மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டம்,
சென்னை-6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது

2) இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை-6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

3) இயக்குநர், மாநில வயது வந்தோர் மற்றும் முறைசாரா கல்வித் திட்டம்,

சென்னை-6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

4) இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை -6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

<u>01.01.2022 நிலவரப்படியான விவரங்கள் ஒப்படைக்க வேண்டிய மாவட்டங்கள் -</u>

| வ. எண் | மாவட்டம் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதி | சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரிவு |
|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், திருப்பூர், நீலகிரி, இராமநாதபுரம், சிவகங்கை | 08.04.2022 | டபிள்யு 3 பிரிவு |
| 2 | மதுரை, தேனி, திண்டுக்கல், நாமக்கல், கோவை, ஈரோடு, சேலம், புதுக்கோட்டை , நாகப்பட்டினம், மயிலாடுதுறை | 11.04.2022 | டபிள்யு 3 பிரிவு |
| 3 | திருவாரூர், தஞ்சாவூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருச்சி, கரூர், கடலூர், பெரம்பலூர், அரியலூர் | 12.04.2022 | டபிள்யு 3 பிரிவு |

| | | | |
|---|---|---|---|
| 4 | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை | 13.04.2022 | டபிள்யு 3 பிரிவு |